பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

“முயற்சி திருவினை யாக்கும்”

தொகுதி 25 | சார்வரி ஞு ஆனி மீ 1960 ஜூன் மீ | பகுதி 3

பொருளடக்கம்

	பக்கம்
சென்னை மாநில கல்வி பொன்விழா மாநாடு மதுரை :	
திரு. தி. சுந்தம் செட்டியார் அவர்களின் வரவேற்புரை ...	57
டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களின் தலைமையுரை ...	60
கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் துவக்க விழா உரை ...	66
ஆரம்ப ஆசிரியர் மாநாடு ...	67
செகண்டரி கல்வி விவாதத்தின் அறிக்கை ...	69
மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ...	70
பத்திராதிபர் குறிப்புகள் ...	74

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை.

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50 ,,
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65 ,,
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85 ,,

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	90 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25

நவீன சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45 ந.பை
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75 ,,

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80 ,,

கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	60 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	60 ,,
மூன்றும் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60 ,,

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1

பாலர் கல்வி

தொகுதி 25 | சார்வரி ஆனி மீ 1960 ஜூன் மீ | பகுதி 3

சென்னை மாநில கல்வி பொன்விழா மாநாடு, மதுரை

வரவேற்புக் குழுத் தலைவர் திரு. தி. சுந்தரம் செட்டியார், பி.காம். அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை

அறிவாற்றல்களிற் சிறந்த தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களே, அன்பர்களே,

சங்கம் இருந்து தமிழ் வளர்த்த இக் கூடல் மாநகரின்கண் நிகழும் 50-ஆவது மாநிலக் கல்வி மாநாட்டிற்குத் தலைமை தாங்க அன்புடன் இசைந்த அறிஞர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களையும், இம்மகாநாட்டைத் திறந்து வைத்துச் சிறப்பிக்க அன்புடன் இசைந்த கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களையும் இங்கு வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அறிஞர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கட்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். அறிஞர் செட்டியார் அவர்களின் திறமான புலமையைத் தமிழகத்தில் அறிந்து போற்றுதார் ஒருவருமிலர். பல்லாண்டுகளாக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், கீழைநாட்டுக் கலைத்துறைத் தலைவராகவும் விளங்கி, அவர்கள் தாய்மொழிக்கும் தமிழகத்திற்கும் ஆற்றிய தொண்டு மறக்கற்பாலதன்று. மேலும், கல்வித் துறையில் மட்டுமின்றி, அரசியலிலும் அருந்திறன் சான்றவர்கள் என்பதை இப்போது சென்னைச் சட்டமன்றத்தில் உறுப்பினராக வீற்றிருந்து அவர்கள் மெய்ப்பித்து வருவதை நாடறியும். எனவே, கல்வியமைச்சர் திறந்து வைக்கும் இம்மாநாட்டிற்கு அவர்கள் தலைமை தாங்குதல் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்ததைப் போலும் இனிமை பயக்கின்றது.

அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களைப்பற்றி உங்களிடம் விரித்துக் கூறுதல் மிகையாகும். கொங்கு நாட்டின் திங்களென விளங்கி வரும் உயர்குடியில் தோன்றிய அவர்கள் சிறந்த வழக்குரைஞராகப் பணியாற்றியவர்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் விரும்பியிருந்தால், தமது தொழிலின் மூலம் பெரும் பொருள் சேர்த்து, இன்பவாழ்வு வாழ்ந்திருக்கலாம். எனினும், தாய் நாட்டுப் பற்றும், விடுதலை வேட்கையும்

மிக்க அவர்கள், தன்னலம் மறுத்து மக்கள் உரிமை வாழ்வை உயிரெனப் போற்றிச் சுதந்திரப் போரில் முனைந்து ஈடுபட்டார். அருந்தியாகங்கள் புரிந்தார். மங்கலமனை வாழ்வைத் துறந்து சிறை வாழ்வை மேற்கொண்டார். அதன் காரணமாக இன்று சென்னை அமைச்சில் சிறப்பிடம் பெற்று, நாட்டின் இரு கண்களாக விளங்கும் பொருள், கல்வி ஆகிய இரு துறைகளையும் வகிக்கும் தனிப்பெருமை சான்று விளங்குகின்றார்.

அவர்களுடைய எண்ணித் துணிந்து செயலாற்றும் அருந்திறத்தால் சென்னை மாநிலம் பொருள்துறையில் நல்ல அடிப்படை பெற்று வளர்ச்சியடைந்து வருவதுடன், கல்வித் துறையில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இலங்குதல் நாடறிந்த உண்மையாகும். இவ்வாறு பல நலங்களும் ஒருங்கமைந்த கல்வியமைச்சரவர்கள் இம்மாநாட்டைத் திறந்து வைத்தல் சாலப் பொருந்துவதன்றிப் பொன் மலர் மணம் பெற்றதைப் போல்வதுமாகும்.

மற்றும், மதுரை மாநகரின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவரும், பொதுநலப் பணிகளில் சிறந்து விளங்குபவருமான திரு. நா. ம. ரா. வெ. மகாதேவன் அவர்கள் மாநாட்டின் கல்வி பொருட்காட்சியைத் திறந்து வைக்கவும், நகராட்சிக்கழகத் தலைவராக வீற்றிருந்து, கூடல் மாநகர மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் தொண்டில் முனைந்து ஈடுபட்டுள்ள திரு. தேவசகாயம் அவர்கள் தேசீயக் கொடியை ஏற்றிவைக்கவும் அன்புடன் இசைந்தமைக்காக எங்கள் உளங் கனிந்த நன்றியறிதலை அவர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனி, கல்வியின் சிறப்பை இக்காலத்தில் அறியாதார் ஒருவருமிலர். கல்வி வாழ்விற்குக் கண்ணென விளங்கும் காரணத்தால், அதற்கு உலகெங்கணும் முதலிடம் அளிக்கப்பட்டு வருகிறது. எனினும், மேலை நாடுகளை நோக்கப் பாரதத்தில் கல்வி வளம் முழுவளர்ச்சியடைந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. எனவே, இத்துறையில் உலக முன்னணி நாடுகளின் முதல் வரிசையில் இடம் பெறும் வகையில் அரசும், பொது மக்களும் இணைந்து பணியாற்றுதல் இன்றியமையாததாகும்.

கல்வி முன்னேற்ற வேகம் எப்போதையும்விட இருபதாம் நூற்றாண்டில் அதிவிரைவைப் பெற்றுள்ளமை கண்கூடு. எனினும், கவிஞர் டி. எஸ். எலியட் கூறியுள்ளதைப்போல, இக்காலக் கல்வி மனிதனை மண்ணுக்கு அணித்தாகவும், ஆண்டவனுக்குச் சேய்மையாகவும் ஆக்கி வருகிறது. இதற்குக் காரணம்

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.'

என்ற வள்ளுவர் பெருமானின் பொன்னுரையை நாம் மறந்ததேயாகும். ஈடு செய்ய முடியாத இக்குறையை நிறைவு செய்ய வேண்டுமாயின், தொடக்கப் பள்ளி முதல், பல்கலைக் கழகம் இறுதியாக, எல்லாப் பாடப் பகுதிகளிலும் இறைப்பற்றை வளர்க்கும் சமயக்கல்வி தக்க இடம்பெறுதல் இன்றியமையாதது. இதை அண்மையில் அரசால் அமைக்கப்பெற்ற பிரகாசா குழுவினரும் உறுதி செய்துள்ளனர். எனவே, கல்வித் துறையில் சமயத்திற்கு ஏற்ற இடமளிக்கும் நற்பணியை நமது அரசினர் விரைந்து மேற்கொள்வர் என நம்புகிறேன்.

மேலும், கல்வியின் நோக்கம் வெறும் அறிவியல்களை மட்டும் மாணவர்க்குப் புகட்டுவதாக அமைந்துவிடுதல் கூடாது. கல்வியின் இறுதி நோக்கம் மாணவர்களை ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக்குவதாக இருக்கவேண்டும்.

'ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.'

என்பது பொதுமறை. ஆதலின், ஒழுக்கம், அதற்கு இன்றியமையாத அடக்கம், கட்டுப்பாடு முதலிய நற்பண்புகளை மாணவர்க்கு ஊட்டி, அவர்களை நாட்டின் நற்குடி மக்களாகவும், தேசீயத் தலைவர்களாகவும் ஆக்கும் வகையில் கல்வித் திட்டம் அமைய வேண்டும்.

மற்றும்,கல்விஅதன் குறிக்கோளை நன்கு நிறைவேற்ற வேண்டுமாயின், ஆசிரியர்க்கும் மாணவர்க்குமிடையே நெருங்கிய தொடர்பு நிலவுதல் இன்றியமையாதது. இத்தகைய சீரிய தன்மை பழைய குருகுலக் கல்வி முறையின் உயிர்நாடியாக விளங்கி வந்ததை இலக்கியமும், வரலாறும் நமக்கு உணர்த்துகின்றன. ஆதலின், இதைக் குறித்தும் அரசும், கல்வியியல் வல்லுநரும், பொதுமக்களும்

ஆழ்ந்து சிந்தித்தல் அவசியம். அதற்கும் மேலாகச் சிறந்த நல்லாசிரியர்கள் கல்விப் பணியின் கருத்துக்கொண்டு, தமது கடமையை இனிதாற்றும் முறையில் அவர்கள் ஊதியம் அமையவேண்டும். இவ்வுண்மையை ஏற்கெனவே அரசு உணர்ந்து செயலாற்றி வருதல் பெரு மகிழ்விற்குரியது.

இறுதியாக, இன்று மக்கள் மனத்தைக் குழப்பி வரும் ஒரு சிக்கல் குறித்துச் சற்றே நாம் சிந்தித்தல் நலம் பயப்பதாகும். கல்வியைத் தாய்மொழியில் பெறுவதா? அன்றிப் பிறமொழியில் கற்பிப்பதா? என்பதே அப்பிணக்காகும். இது குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவதா? அல்லது புட்டிப்பால் தருவதா என்று ஆராய்ச்சி செய்வதைப்போன்று உள்ளது. எனினும், பெரும்பாலோர் கருத்துத் தாய்மொழிக்கே ஆதரவாக அமைந்திருப்பதால், அரசும் மக்களாட்சி முறைக்கேற்பப் பெரும்பான்மையோர் விருப்பத்திற்கு இணங்கிச் செயலாற்ற முன்வந்துள்ளது. அரசுக்கும், சிறப்பாகக் கல்வியமைச்சர்க்கும் இதன் பொருட்டு நாம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

முடிவாக ஒன்று கூறி அமைய விழைகின்றேன். கல்வியின் குறிக்கோள் முழு வெற்றியடைந்து விரும்பிய பயன் அளிப்பது குறிப்பிட்ட ஒரு சாராரின் முயற்சியை மட்டும் பொறுத்திருக்கவில்லை. ஆசிரியர், மாணவர், பொது மக்கள், அரசினர் ஆகிய நான்கு பகுதியினரும் கல்விக் கோயிலின் வலிய தூண்களாவர். இவற்றுள் ஒரு தூண் பிளந்திறினும், இடம்பெயர்ந்தாலும் ஆலயத்தின் விதானம் ஊறடைதல் உறுதி. எனவே, இதைத் தனியொருவர் பொறுப்பாக நினைக்காமல் தொடர்புள்ள அனைவரும் ஒன்றுபட்டுப் பாரதத்தைக் கல்வி சிறந்த நன்னாடாக்கும் அருந்தொண்டில் முனைந்து ஈடுபடுவார்களாக.

இனி, ஈண்டு உங்கள் முன்னிலையில் என் சிற்றறிவிற்கு எட்டியவரை யான் வெளியிட்ட விழைவுகள் கல்வியமைச்சரின் வருகையாலும், இதைப் போன்ற மாநாடுகளின் விளைவாகவும் செயலளவில் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன், அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களையும், ஏனைய பெருமக்களையும், மாநாட்டுத் தலைவரையும், சார்பாளர்களையும், எனது சார்பாகவும், வரவேற்புக் குழுவின் சார்பாகவும் மீண்டும் வாழ்த்தி வரவேற்கின்றேன்.

வணக்கம்

சென்னை மாநிலக் கல்வி மாநாட்டின் பொன்விழாக் கூட்டம் மதுரையில் 19—5—1960-இல் நடைபெற்றபோது சென்னை மேல் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அ. சிதம்பரநாதன் நிகழ்த்திய தலைமையுரை

பேரன்புடை நண்பர்களே! தென்னிந்திய ஆசிரியர் சங்கமும் மாநிலத்திலுள்ள பல்வேறு ஆசிரியர் கழகங்களும் என்னை இப்பொன் விழா மாநாட்டின் தலைவராக இவ்வாண்டு தேர்ந்தெடுத்தமைக்காக என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்கள் தம்முள் ஒருவரை இவ்வாறு பெருமைப் படுத்துவதுபற்றி மகிழ்கிறேன். உங்களுடைய உளமொப்பிய ஒத்துழைப்பினால் மாநாட்டுத் தலைமையாளருடைய கடமைகளை ஒழுங்குற நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கையுடையேன்.

இதுகாறும் செய்துள்ள சிறந்த பணிகளால் தென்னிந்திய ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களிடத்திலும் நிர்வாகியர்களிடத்திலும் நல்ல மதிப்பு பெற்றிருப்பது பாராட்டக் கூடியதொன்று. காலஞ்சென்ற திரு. சபேசன் போன்றவர்களாலும், அடுத்தடுத்து வந்த தலைவர்களாலும் இச்சங்கம் நல்ல வளர்ச்சியுற்று இருக்கிறது. மாநிலத்தில் கல்விபற்றிய செய்திகளைக் குறித்து ஆலோசனை கூறுதற்குரிய சிறந்ததோர் அமைப்பாக இது கருதப்படக்கூடிய அளவிற்கு இச்சங்கம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதுகாறும் இச்சங்கம் செய்துள்ள பணிகளைப் பாராட்டி, வரும் ஆண்டுகளில் இன்னும் சிறந்த பணிகளை இது ஆற்றிச் சிறக்க வேண்டுமென வாழ்த்துகிறேன். இம்மாநிலத்திலுள்ள ஆசிரியர்கள் இன்னும் அதிகமாக இச்சங்கத்தில் உறுப்பினர்கள் ஆதல் வேண்டும். மாவட்ட ஆசிரியக் கழகங்கள் வாயிலாகவாயினும், நேராகவாயினும் இச்சங்கத்தின் உறுப்பினர்களாக ஆசிரியர்கள் இன்னும் அதிகமாகச் சேர்வது விரும்பத்தக்கது.

இப்போது நம் மாநிலத்தில் முக்கிய கல்விச் சிக்கலாக இருப்பது கல்லூரிகளில் படிப்புமொழி யாது என்பதாகும். இதனைப் பேரறிஞர்கள் பலரும், உலகம் புகழ் கல்வி நிபுணர்கள் சிலரும் ஆராய்ந்து தத்தம் கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில், மாநில அளவில் ஆசிரியர்களும் கல்வியாளர்களும் கூடியுள்ள இம்மாநாட்டில் இதுபற்றிச் சிந்திக்காமல் இருத்தல் இயலாது. இச்சிக்கலைப் பற்றிக் கருதும்பொழுது இதுகாறும் நடந்துள்ள நிகழ்ச்சிகள் சிலவற்றை உடன் எண்ணுதல் வேண்டும். சென்ற ஆண்டு நடைபெற்ற கல்வி மாநாட்டுத் தலைவர் சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் கூறி உள்ளவாறு 1949-இல் டெல்லி சட்டமன்றத்தில் இந்தியை நம் தேசத்தின் அலுவல் மொழியாக இந்தி அறியாத மக்கள் ஒப்புக்கொண்டது அடிப்படையில் தவறு. தப்பாகவோ சரியாகவோ, ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அதனிடத்தில் வேறொரு மொழியை வைக்க வேண்டுமென்ற எண்ணத்தால் இந்திய மத்திய அரசாங்கத்தின் அலுவல் மொழியாக இந்தியை அப்போது ஏற்றுக்கொண்டு விட்டோம். அந்நேரத்தில் ஆங்கிலேயர்களிடத்திற் பொதுவாக இருந்த ஓர் அரசியல் வெறுப்பு ஆங்கில மொழியினிடத்திலும் வெறுப்பாக மாறிற்று என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்திய அரசாங்க சட்டத்தில் ஏதோ ஒரு சலுகை போல 1965 வரை ஆங்கில மொழி இந்திய அலுவல் மொழியாகப் பயன்படுத்தப்படலாம் என்று கூறப்பட்டு இருக்கிறது. 1965-க்குப் பிறகும் பார்லிமெண்டு விரும்பினால் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்தலாம் என்று முடிவுசெய்தல் கூடும். 1955-இல் குடியரசுத் தலைவரால் சட்டப்படி நியமிக்கப்பட்ட அலுவல் மொழிக் குழுவும், அதனை 1957-இல் ஆராய்ந்த பார்லிமெண்டு குழுவும் தத்தம் சிபாரிசுகளைக் குடியரசுத் தலைவருக்குச் செய்துள. 344(6) பிரிவினை ஒட்டிக் குடியரசுத் தலைவர் சில கட்டளைகளை அண்மையில் பிறப்பித்துள்ளார். அவ்வாணைகளுள் ஒன்றின்படி மத்திய அரசாங்கத்தின் அலுவல்களில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதில் இப்போது தடையோ விலக்கோ ஏற்படுத்தப்படவில்லை. இந்திய மத்திய

சட்டசபைகள் ஆங்கிலத்தில் சட்டம் இயற்றலாம் என்பது ஆணை. எனினும், இந்தியிலோ வட்டார மொழிகளிலோ அச்சட்டங்களின் மொழி பெயர்ப்புகள் இயற்றப்படுதற்கு வழி வகுக்கப் பட்டுள்ளது. நாட்டுப் பாதுகாப்புத் துறைப் பணிகளில் ஆங்கிலம் அல்லது இந்தி பயிற்றும் மொழியாகக் கொள்ளப் படும் என்றும், வட்டார மொழிகளை இத் துறையில் பயன்படுத்துதல் எந்த அளவு வேண்டும் அல்லது எந்த அளவு முடியும் என்பதைக் கூறுதற்கு நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் அவ்வாணைகளில் ஒன்று சொல்லுகிறது. அனைத்திந்தியப் பணிநிலைகட்கும் மத்திய அரசாங்க உயர்தரப் பணியிடங்கட்கும் உரிய அலுவலாளர்களைத் தேர்ந்தெடுப் பதற்கென அமைந்த போட்டித் தேர்வுகளில் ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டுமென்றும், சிறிது காலம் கழித்து இந்தி வழியாக இத்தேர்வுகள் நடத்தப் பெறலாம் என்றும் ஆணை ஒன்று கூறுகிறது. எந்த வட்டார மொழியும் அனைத் திந்திய தேர்வுகளுக்குரிய மொழியாகக் கருதப்படவில்லை என்பது மிக்க வருத்தத் துடன் குறிப்பிடத்தக்கது. மற்றொரு பால், உயர்தர நீதிமன்றங்களின் தீர்ப்புகளும் ஆணைகளும் கட்டளைகளும் இந்தியிலோ வட்டார மொழிகளிலோ இருக்கலாம் என்பது ஆணை. மீயுயர் டெல்லி நீதிமன் றத்தில் ஆங்கிலத்திற்கு மாறாக இந்தியே நாளடைவில் பயன்படுத்தப்படும் என்று அவ்வாணை கூறுகிறது. இவ்வாறு குடியரசுத் தலைவரால் கட்டளைகள் சட்டப்படி பிறப்பிக்கப்பட்டுள்ள தறுவாயில், நம் மாநிலக் கல்விமொழிபற்றிய ஆராய்ச்சி முன்னர் இருந்ததைவிடச் சற்று அதிக மான குழப்பநிலை அடைகிறது.

தஞ்சையில் ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற இதைப்போன்ற தொரு மாநாட்டில் தலைமை தாங்கிய மதிப்புக்குரிய துணைவேந்தர் டாக்டர் இலக்குமணசுவாமி முதலியார் அவர்கள் நம் மாநிலத்தில் படிமுறை வளர்ச்சியினால் பலதிற உயர்நிலைக் கல்விகள் எல்லாம் தாய்மொழி வழியாக அளிக்கப்படுதல் கூடும் என்ற நிலை வரலாம் என்றும், நன்றாகத் திட்டமிட்ட பிற்பாடே கல்வி மொழி மாற்றம் செய்யப்பட வேண்டு மென்றும் தெரிவித்துள்ளார். பல்கலைக் கழகச் சட்ட நுணுக்கங்களையோ மாநில அரசாங்கத்தின் சட்ட நுணுக்கங்களையோ நான் இப்போது ஆராய்ந்து பார்த்து எந்த அளவு அரசாங்கத்தின் தலையீடு பல்கலைக்கழகக் கல்விச் செய்திகளில் ஒப்புக்கொள்ளத்தக்கது என்று கூறப்போவது இல்லை. எனினும், 1948-இல் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகங்களின் ஐந்தாண்டுக்கொரு முறை நடைபெறும் மாநாட்டில் நான் கலந்து கொண்டபொழுது நிறைவேறிய தீர்மானம் ஒன்று நினைவிற்கு வருகிறது. இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் பல்கலைக் கழக வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத் திற்காகவும் பொருளுதவி செய்ய முன் வருவதுபற்றி மாநாடு மகிழ்கிறதாயினும், அது காரணமாகப் பல்கலைக் கழகங் களுடைய தன்னாட்சித் தன்மையோ சுயேச்சையோ பாதிக்கப்படக் கூடாது என்பது அத்தீர்மானம். பிரிட்டிஷ் பல் கலைக்கழகங்களில் அரசாங்கத் தலையீடு ஓரளவும் கிடையாது. பல்கலைக்கழகங் களின் தேவைகளுக்குத் தகப் பொருளு தவி செய்வதுதான் பல்கலைக்கழக மானியக்குழுவின் நோக்கமாக அங்கே உளது. பிரிட்டிஷ் அரசாங்கம் நேரே பல் கலைக்கழகங்களுக்கு நிதிகளைத் தந்து விடாமல் மானியக்குழு வழியாகத் தரு கிறது என்பதுதான் அங்குள்ள நிலை. அந்த வகையில் நம் தேசத்திலும் பல் கலைக்கழக மானியக்குழு அமைக்கப் பட்டிருக்கிறது. இம்மானியக்குழு தோற்று விக்கப்பட்ட பொழுது பிரிட்டிஷ் மானி யக்குழுவினை ஒத்ததாகவே இது அமைக் கப்படுவதாகக் கூறப்பட்டதால், பல்கலைக் கழகங்களின் தன்னுரிமையைப் பாதிக் காத வகையில் அரசாங்கத்தின் உதவி ஏற்படும் என்பது நம்பப்பட்டது. இக் கருத்தின் அடிப்படையை நினைவில் வைப்போமானால், மாறிமாறிவரும் அர சாங்கங்களுடைய அரசியல் கொள்கை களுக்கேற்பப் பல்கலைக்கழகங்கள் கல்விக் கொள்கைகளை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தப் படுதல் பொருந்தாது என்பது வெளிப் படை.

1966-இல் மூன்றாண்டு பி. ஏ., முடிவுத் தேர்வு எழுதவேண்டிய வகுப்பிற் படிக்க வரும் மாணவர்களுக்குத் தமிழ்மொழி வாயிலாகவே 1963 முதல் கல்வி கற்பிக் கப்படும் என்பது நம் மாநில அரசாங் கத்தின் முடிவு. 1966-ஆம் ஆண்டுக்குப் பிறகும் தனியார் நடத்தும் கல்லூரிகளில்

ஆங்கிலம் வழியாகக் கற்பிக்கலாம் என்றிருந்தாலும், அரசாங்கம் கொடுக்கக்கூடிய உதவித்தொகைகள் அப்படிப்புக்களுக்குக் கொடுக்கப்படமாட்டா என்று அரசாங்க ஆணை கூறுகிறது. ஆங்கில மொழி வாயிலாகக் கற்பிக்க வேண்டுமென்று விரும்புகிற தனியார் கல்லூரிகள் அம்முறையில் நடைபெறுவதற்கு இடம் கொடுத்திருப்பது ஓரளவு வரவேற்கத்தக்கது. அனைத்திந்திய தேர்வுகளுக்கும் மத்திய அரசாங்க உயர்தரப் பணிநிலைத் தேர்வுகளுக்கும் பாதுகாப்புத்துறைத் தேர்வுகளுக்கும் உரிய போட்டிகளிலும் தேர்வுகளிலும் ஆங்கிலம் வழியாக மாணவர்கள் கலந்துகொள்ள வேண்டிய நிலை இருப்பதால், அவர்களுக்கு இது உதவியாக இருக்கும். அதனல், ஆங்கில வழியாகத் தொடர்ந்து கல்வி பயிற்றுவிக்கக் கருதும் தனியார் கல்லூரிகளுக்கு இன்னும் சில ஆண்டுகள் வரையிலாவது இதுகாறும் கொடுக்கப்பட்டு வரும் பணவுதவிகள் தொடர்ந்து கொடுக்கப்படுதல் நல்லதன்றோ!

தமிழ்மொழி வழியாகப் பயிற்றுவித்தல் என்பதைச் செயற்படுத்தத் தமிழ் மாநிலத்திலுள்ள இரண்டு பல்கலைக் கழகங்களும் தம்முள்ளும் அரசாங்கத்தோடும் ஒத்துழைக்குமானுல், எவ்வளவு நன்ருயிருக்கும் என்று உயர்தரக் கல்வி முன்னேற்றத்தில் நாட்டமுடைய பலர் எண்ணுகிருர்கள்.

தாய்மொழி வழியாகப் பயிற்றுவிக்கப்படும் கல்வி மக்கள் உள்ளத்தோடு ஒட்டி அமையும் என்பதை நிறுவுவதற்குப் பல சான்றுகள் வேண்டா. ஆங்கிலமொழி வாயிலாகப் பாடங்களைப் படிப்பிக்கப் பெறுகிற மாணவர்களிற் பலர் படித்ததை நாளடைவில் மறந்துவிடுகிருர்கள் என்றும், படித்தவற்றை முழுதும் செமித்துக் கொள்கிருர்கள் அல்லர் என்றும் காண்கிரேம். நம் மாநிலத்தில் தமிழ்மொழி வாயிலாக நடத்தப்படும் கல்வியால், ஆங்கிலமொழி வாயிலாகக் கற்கும் பொழுது செலவாகக்கூடிய மனித ஆற்றலும் நேரமும் முயற்சியும் குறையும் என்பது வெளிப்படை. தாமே கருதிப் பார்ப்பதற்கும் ஆராய்ச்சிகள் செய்வதற்கும், தாய்மொழிவழிக் கல்வி மாணவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பது நம்பிக்கை.

1929-இல் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகங்களின் மாநாட்டிலும், அதனைத் தொடர்ந்து ஐந்தாண்டுக்குப் பிறகு நடைபெற்ற மாநாட்டிலும் பேராசிரியர் துருவர், திரு. சத்திய மூர்த்தி, பண்டித மதன்மோகன மாளவியா போன்ற அறிஞர்கள் இந்திய வட்டார மொழிகளில் ஏதேனும் ஒன்றைக் கூடிய விரைவில் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பயிற்று மொழியாக ஆக்குவது விரும்பத்தக்கது என்று எடுத்துரைத்துள்ளார். 1942-இல் இந்தூரில் நடந்த அனைத்திந்தியக் கல்வி மாநாட்டில் நம் தேசத்து மொழிகள் வழியாகக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டாலன்றிப் பல்கலைக் கழகக் கல்வி தன்னுடைய உயரிய நோக்கங்களைக் கைவரப் பெற்றதாகக் கருதுதல் இயலாது என்ருெரு தீர்மானம் நிறைவேறியுள்ளது. பேரறிஞரும் இந்தியக் குடியரசின் துணைத் தலைவருமாகிய சர். எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழு பரிந்துரைத்த தீர்மானங்களில் ஒன்ருக, வட்டார மொழிகளுள் ஒன்றன் வழியாக உயர்தரக் கல்வி பல்கலைக் கழகங்களிற் கற்பிக்கப்பட வேண்டுமென்பது காணப்படுகிறது. ஆங்கிலத்தை அகற்றி, அதனிடத்திற் பயிற்று மொழியாகச் சமஸ்கிருதம் அல்லாத ஏதாவது ஓர் இந்திய மொழியை இயலுமளவு விரைவில் அமர்த்தல் வேண்டும் என்பதும் அக்குழுவினர் சிபாரிசு. பண்டித நேரு அண்மையில் டெல்லி சட்டமன்றத்திற் பேசும்பொழுது ஆங்கிலம் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் பயிற்று மொழியாக இருத்தல்கூடாது என்பதைத் தெளிவாக்கியுள்ளார். சென்ற மாதத்தில் டெல்லி மேல் சட்டமன்றத்திற் பேசிய மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சர் டாக்டர் ஸ்ரீ மாலி வட்டார மொழிகள் பல்கலைக் கழகங்களிற் பயிற்று மொழியாகக் கூடிய விரைவில் அமையவேண்டுமென்று அரசாங்கம் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். இவற்ருேடுகூட, நம்முடைய மாநிலத்தில் அரசாங்க அலுவல் மொழியாகத் தமிழ் அமைந்துள்ளது என்பதையும் சேர்த்து எண்ணிப் பார்த்தல் தக்கது. குடியரசுத் தலைவரின் கட்டளைகளின்படி சென்னை உயர்நீதி மன்றத்திலும் தீர்ப்புகளும் கட்டளைகளும்

ஆணைகளும் தமிழில் பிறப்பிக்கப் படக் கூடிய காலம் அண்மையில் வருகிறது என்பதையும் உன்னுதல் வேண்டும். இவற்றையெல்லாம் கருதினுல், பி. ஏ. பாடப் படிப்பின் பயிற்று மொழியாக தமிழ் அமைவது பொருத்தமானது என்பது புலப்படும்.

கோயம்புத்தூரில் நடத்தப்படவிருக்கும் முன்னணிக் கல்லூரியின் நிர்வாகக் குழுவினர் தக்க ஆசிரியர்களைப் பாடப் புத்தக மொழிபெயர்ப்பு ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். வேலையும் சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. இவ்வாசிரியர்களுடைய ஆழ்ந்த அனுபவத்தாலும் தக்க திறமையாலும் வெளியாகக்கூடிய புத்தகங்கள் உடனடியாக உள்ள தேவைக்கு ஒத்தனவாக இருக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

சோவியத் ரஷ்யாவில் இருநூறு மொழிகள் பொதுவாகப் பேசப்படுகின்றன என்ருலும், பதினுறு மொழிகளே முக்கிய மொழிகளாக மதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, நம் தேசத்திலும் ஏறத்தாழ நூற்றெண்பது மொழிகள் பேசப்படுகின்றன எனினும், அவற்றில் பதினுன்கு மொழிகளையே சிறப்புடைய மொழிகளாக அரசாங்கம் எண்ணிச் சட்ட அட்டவணையிற் சேர்த்துள்ளது. ரஷ்யாவில் ரஷ்யன் மொழியில் மாத்திரமன்றி உக்ரேனியன், அஷ்பெக், தாத்தர், ஜியார்ஜியன், கசாக் ஆகிய மொழிகள் வாயிலாகவும் உயர்தரக்கல்வி கற்பிக்கப் படுகிறது. அஷ்பெக்கிஸ்தான் பகுதியில் அஷ்பெக் மொழி பல்கலைக் கழகப் பயிற்றுமொழிகளில் ஒன்ருகக் கொள்ளப்பட்டுள்ளது. அம்மொழியைப் பேசுகின்றவர்களுடைய தொகை தமிழ் பேசுகின்றவர்களுடைய தொகைக்குமேல் இல்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்திய அரசாங்க சட்டத்தின்படி நம் நாட்டில் வயதுவந்தவர்கள் அனைவருக்கும் தேர்தல்களில் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி, சிறுவர்கள் அனைவரும் பதினுன்கு வயதுவரை காசின்றிக் கட்டாயக் கல்வி பெறும் உரிமையுடையவராகி விட்டார்கள். இக்கல்வி இந்திய மொழிகளுள் ஒன்றன் வழியாகத்தான் கொடுக்கப்படும் என்பது உறுதி. தமிழ் மாநிலத்தில் உயர்தரப் பள்ளிக்கூடங்களில் தமிழே பயிற்று மொழியாகப் பல்லாண்டுகள் இருந்து வந்து விட்டபடியால், அதற்கு அடுத்த நிலையில் கல்லூரிகளிலும் அம்மொழியே தொடர்ந்து பயிற்று மொழியாக அமைந்தாலன்றி மாணவர்கள் இடர்ப்படுவார்கள் என்பது தெளிவு. உயர்தரப் பள்ளிக்கூடப் படிப்பிற்கும் பல்கலைக் கழகப் படிப்பிற்கும் இடையேயுள்ள புகுமுகத் தேர்வு வகுப்பிலும் தமிழே பயிற்று மொழியாக அமைக்கப்படாமல் இருப்பது ஒரு குறை எனவே கருதத் தக்கது. பல்கலைக் கழகத்தாரும் அரசாங்கத்தாரும் இதுபற்றி ஆழச் சிந்தித்து ஒத்ததொரு நல்ல முடிவிற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

சென்னை மாநில அரசாங்கத்தார் ஆங்கில மொழியினுடைய சிறப்பினை மதித்து அதற்குத் தக்க இடம் பாடதிட்டத்தில் அமைக்க இணங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. விஞ்ஞானக் கருத்துக்களையும் தொழில் நுணுக்கக் கருத்துக்களையும் நன்ருக நாம் கற்றறிந்து கொள்வதற்கு ஆங்கிலம் இன்னும் தக்க திறவுகோலாக இருந்துவருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. நம் மாநிலத்தை இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களோடு தொடர்புபடுத்தக் கூடியதாகவும், இந்திய தேசத்தைப் பிற தேசங்களோடு தொடர்புபடுத்தக் கூடியதாகவும் ஆங்கில மொழி இருக்கிறது என்பது வெளிப்படை. அதனுல், ஆங்கிலப் படிப்பைத் தக்கவாறு பேணுகின்ற வகையில் பி.ஏ. பாடப்படிப்பின் அமைப்பு இருப்பது போற்றத்தக்கதே. ஆகையால், பி. ஏ. வகுப்புக்களில் தமிழைப் பயிற்றுமொழியாக ஆக்குதலை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், மாணவர்களும் பெற்றேர்களும் தாம்தாம் விரும்புமாறுபயிற்று மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குரிய வகையில் இவ்வமைப்பு சில ஆண்டுகள் வரையில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

தனியார்கள் நடத்தும் கல்லூரிகளுக்குக் கொடுத்துவரும் பண உதவியை ஆங்கில மொழி வாயிலாகத் தொடர்ந்து கற்பித்து வரும் காரணத்தால் நிறுத்திவிட வேண்டாம் என்று ஆலோசனை கூறுகிறேன். எனினும், தமிழ்மொழி வாயிலாகப் பயிற்றுவிக்கத் தொடங்கும் தனியார் கல்லூரிகள் எல்லாவற்றிற்கும் சிறப்பு ஏற்பாடுகள் செய்து சிறப்புச் சலுகைகள் காட்டிப் பண உதவி செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும். கோயம்புத்

தூரில் நடைபெற இருக்கும் முன்னணிக் கல்லூரியில் இவ்வாண்டு சேர இருக்கும் மாணவர்களுக்குச் சம்பள விலக்குத் தருதல் பற்றியும் அவர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் காட்ட முன்வருவதுபற்றியும் அரசாங்கத்தை நான் போற்றுகின்றேன்.

இனி, கல்லூரிகளிற் பணியாற்றும் ஆசிரியர்களிற் பலர் இந்திய அரசாங்கம் தரவிழையும் உயர்ந்த படிநிலைச்சம்பளங்கள் பெற முடியாத நிலையிலிருந்து வருந்துகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை மாநில அரசாங்கம் காற்கூறு அதிகச் செலவினை ஒப்புக்கொண்டால், இந்திய அரசாங்கமானியக் குழு அரைக்கூறு அதிகச் செலவினை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறது. மற்றதொரு காற்கூற்றினை ஒப்புக்கொள்ளக்கூடிய நிலையிலுள்ள தனியாரால் நடத்தப்படும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்கள் உயர்வுநிலைச் சம்பளம் பெறுது ஏங்குகிறார்கள். சென்னை அரசாங்கம் கல்லூரி மாணவர்கள் எண்ணிக்கை குறித்தும் ஒரேவகைப் பாடங்கள் பல கல்லூரிகளில் தனித்தனியாக நடத்தப்படுவதைக் குறைப்பதைக் குறித்தும் ஆராய்ந்து கொண்டிருப்பதால், இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் படிப்பில் மாணவர் எண்ணிக்கை பற்றிய ஆராய்ச்சிக்கு அதிக இடமில்லை. இவ்வாராய்ச்சியால் கல்லூரி ஆசிரியர் சம்பளவுயர்வு பிற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல வழங்குதலில் தங்குதடை ஏற்பட்டுள்ளது. இது குறித்து, மாநில அரசாங்கம் விரைவில் தக்கதொரு நல்ல முடிவிற்கு வர வேண்டுமென வற்புறுத்த விரும்புகிறேன்.

இக்காலத்தில் நம் மாநிலத்தில் இருந்து வரும் இன்னொரு கல்விச்சிக்கல் பாட புத்தகங்கள் வெளியீடு பற்றியது. தென்னிந்திய ஆசிரியர்கள் சங்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களின் வழியாகவும், அனைத்திந்தியக் கல்வி மாநாட்டுத் தீர்மானம் வழியாகவும், பள்ளிக்கூட பாட புத்தகங்களை அரசாங்கம் தானேயாக வெளியிடும் எண்ணத்தை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஏனைய பதிப்பாசிரியர்களோடு உறழ்ந்து அரசாங்கமும் விரும்பினால் ஒரு பதிப்பு நிலையமாக அமையலாமேயன்றிப் பதிப்புரிமைகள் அனைத்தையும் அரசாங்கம் தனதேயாக ஆக்கிக்கொண்டு விடக்கூடாது. மாணவர்களுக்குப் பல திறப்பட்ட புத்தகங்கள் தேவை. ஆசிரியர் பலர் பாட திட்டத்திற்கேற்பத் தத்தம் மதிநலத்தாலும் ஆழ்ந்த அனுபவத்தாலும் இயற்றித் தரும் புத்தகங்கள் தேவை. அவற்றை அழகிய முறையில் வெளிப்படுத்துவதின்கண்ணே பதிப்பாசிரியர்களுடைய போட்டி இருந்தால் தான் நல்ல புத்தகங்கள் உருவாதல் கூடும். நல்ல புத்தகங்கள் என அரசாங்க ஒப்புதலைப் பெறுகின்ற புத்தகங்களிலிருந்து ஆசிரியர்கள் தத்தம் பள்ளிக்கூட மாணவர்களுக்கு உரிய உரிய புத்தகங்களைத் தாமாகவோ தலைமையாசிரியர்களோடு கலந்துகொண்டோ தேர்ந்தெடுத்துக்கொள்ளக்கூடிய நிலை இருந்தாலன்றி நம் நாட்டின் கல்விநிலை நல்ல நிலை எய்தமாட்டாது. ஆதலால், தொடக்க நிலைப் பள்ளிக்கூடங்களுக்கும் உயர் நிலைப்பள்ளிக்கூடங்களுக்கும் உரிய பாட புத்தகங்களை வெளியிடும் எண்ணமுள்ள அரசாங்கம் தன் கருத்தினை மீண்டும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

மாநிலத்தில் தனியார்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களிற் பணியாற்றும் ஆசிரியர்கள் சிலர் நிர்வாகியர்கள் தரும் தொந்தரவுக்கு உள்ளாகிறார்கள் என்ற செய்தி அடிக்கடி காதில் வந்து விழுகின்றது. தக்க காரணமின்றி ஆசிரியர்களைப் பள்ளிக்கூட வேலைகளிலிருந்து நீக்குவதென்பதோ அவர்களுக்குரிய படி உயர்வுகளைத் தராமல் இருப்பதோ பொருந்தாது. ஆசிரியர்களை ஏதாவதொரு தக்க காரணத்திற்காக விலக்க விரும்பும் நிர்வாகியர்கள் மாநிலக் கல்வித்துறை இயக்குநரின் முன்னிசைவு பெற்று விலக்க வேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்கள் ஓர் ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்று அறிகிறேன். இவ்வாணை தக்க முறையில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறதா என்பதை மேற்பார்வையாளர்கள் கவனித்து அரசாங்கத்துக்கு அடிக்கடி தெரிவிப்பார்கள் என்பதை எதிர்பார்க்கலாமா ?

ஆசிரியர்களின் குறைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டு வரப்பட்டுள. கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் மாநிலக் கல்வித்துறை இயக்குநர் திரு. சுந்தரவடிவேலு அவர்களும் பல குறைகளை அன்புடன் நிறைசெய்துள்ளார்கள் என்பது

டாக்டர் அ. சிதம்பரநாதன்



கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்

பற்றி அவர்களைப் பாராட்டுகிறேன். அண்மையில், 1955 ஏப்ரல் மாத முதற் கொண்டு ஓய்வுபெற்ற பல்வகைப் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்களுக்கும் ஓய்வுகால ஊதியம் தரலாம் என்ற வகையில் ஆணை பிறந்திருப்பது பாராட்டத்தக்கது. எனினும், வீட்டு வாடகைப்படி தராமை போன்ற சில குறைகள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றைப் பற்றித் தீர்மானங்கள் இயற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் பொழுது அரசாங்கம் நன்கு கவனித்து ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

தொடக்கநிலைப் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எனத் தனிக்குறைகள் சில இருக்கின்றன. சம்பளம் வசூலிக்கப்படாத பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ள தொடக்கநிலைப் பள்ளிகளிற் பணியாற்றிய ஆசிரியர்கள் பலர் வேலையில் உள்ளார்களே ஆயினும், முன்னர்த் தாம் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தைவிடக் குறைந்த சம்பளத்தில் வேலையை ஒத்துக்கொண்டு பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அன்றியும், சில நாட்கள்முன் வெளிவந்த அரசாங்க ஆணை ஒன்றினுல் தொடக்கநிலைப்பள்ளி ஆசிரியருட் பலர் நடுத்தரப் பயிற்சி பெருதிருப்பவர்கள் வேலையிழக்கக்கூடிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. ஆங்கிலம் கற்பிக்கச் செகண்டரி கிரேடு ஆசிரியர்களே நியமிக்கப்பட வேண்டும் என்று இட்டுள்ள ஆணையினுல், முன்னரே வேலையிலுள்ள எல்மெண்டரி ஹையர் கிரேடு ஆசிரியர் பலர் வேலையிழக்க நேரிடுவதை மாற்றி அமைக்கத் தக்க செயல்களை அரசாங்கம் உடனே மேற்கொள்ளவேண்டும்.

இம்மாநாட்டின் ஒரு சிறகாக நடைபெறும் தொடக்கநிலை ஆசிரியர்கள் கூட்டத்தில் இவைபற்றிச் செய்யப்படும் தீர்மானங்கன் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும். அவற்றை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யுமென்று நம்புகிறேன்.

உயர்தரப் பள்ளிக்கூடங்களை மேலுயர்தரப் பள்ளிக்கூடங்களாக ஆக்குவது பற்றி முடிவுசெய்ததற்கேற்ப எட்டாம் வகுப்பு சென்ற ஆண்டிலேயே தொடங்கப்பட்டுவிட்டது. 1963-ல் நடைபெற வேண்டிய மேலுயர்நிலை வகுப்புப் பொதுத்தேர்வு பற்றிய வினைத்தாள் மாதிரி விவரங்கள் பள்ளிக்கூடங்களுக்கு இன்னும் அனுப்பப்பட்டனவாகத் தெரியவில்லை. 9, 10-ஆம் வகுப்புகளின் பாடமுறையும் தேர்வுகளும் பதினோராம் வகுப்புத் தேர்வினை அடியொற்றியனவாக இருக்க வேண்டும் ஆதலால், விரைவில் இதுபற்றி முடிவுகள் செய்தல் வேண்டும். மேலுயர்நிலைப்பள்ளிகளில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களுடைய தகுதிகள் இன்னவென இன்னும் வரையறை செய்யப்படவில்லை. இவைபற்றிய முடிவுகளும் விரைவில் அறிவிக்கப்படும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

உயர்தரப் பள்ளிக்கூடங்கள் சிலவற்றிற் பணியாற்றும் கைத்தொழில் ஆசிரியர்களும் தையல்வேலை ஆசிரியர்களும், ஓவிய ஆசிரியர்களும் இவர் போன்ற பிறரும் ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு மேலே வேலையில் தொடர்ந்து இருந்தும்கூட, அவரவர் நிலையில் இன்னும் உறுதிசெய்யப்படாமல் இருக்கிருர்கள். அவர்கள் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றவராக இருந்தாலன்றி உறுதி செய்யப்படமாட்டார்கள் என்று இருக்கும் விதியைச் சிறிது தளர்த்தி, அவர்கள் ஏழு அல்லது எட்டாவது வகுப்புவரை படித்திருந்து தத்தம் துறையில் தக்க தேர்ச்சி பெற்றவராய் இருந்தால், அவர்களை அவ்வந்நிலையில் விரைவில் உறுதிசெய்ய அரசாங்கம் ஏற்பாடுகள் செய்தல் நல்லது. தமிழாசிரியர்கள் குறித்தும் இந்தச்செய்தி ஆராயப்பட்டுப் பல மாவட்டக்கழகங்களில் ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் வேலைபார்த்தும் வேலையில் உறுதி செய்யப்படாமல் இருக்கும் ஆசிரியர்களை விரைவில் உறுதி செய்யும்படி ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

மாநாட்டின் சிறகுகளாக உயர்தரப் பள்ளிக்கூடப் பிரிவும், பல்கலைக்கழகப் பிரிவும், மகளிர் கல்விப் பிரிவும் என பல பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வப்பிரிவுகளிற் செய்யப்படும் சிறப்பு ஆராய்ச்சிகளும் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும் கருத்துரைகளும் தக்க வகையில் அமையும் என எதிர்பார்க்கிறேன். மாநாடு வெற்றியுற நடைபெறுக என மீண்டும் ஒருமுறை வாழ்த்துகிறேன்

கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் துவக்கவிழா உரை

கடந்த 50 வருட காலமாக, கல்விக்காக அரும்பாடு பட்டு வரும் தென்னிந்திய ஆசிரியர்கள் சங்கத்தின் சேவைகளைப் பாராட்டிய கல்வி மந்திரி கல்வியைப் பரப்புவதில் சர்க்கார் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளது என்றும் 6 முதல் 14 வயது வரையுமுள்ள குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று அரசியலமைப்பே தெரிவிக்கிறது என்றும் கூறினர். சட்டத்தை ஆக்குவது எளிது என்றும் அதை அமலுக்குக் கொண்டு வரும் பொழுதுதான் கஷ்டம் தோன்றுகிறது என்றும் சொன்னர்.

கல்வியைப் பற்றிப் பேசும் பொழுது அதன் உண்மை லட்சியம் என்ன என்பதை எல்லோரும் தெரிந்திருக்க வேண்டும். மக்களை வெறும் எழுத்தறிவுடையவராக்குதலும் உலகில் அறிவுடையவராக்குதலும் உண்மை கல்வியாகாது. ஆத்மீக அறிவும் சேர்த்துப் புகட்டப்பட்டால்தான் வாழ்வில் கல்வி பயனுடையதாகும். சர்க்காரின் தற்பொழுதைய கல்வித் திட்டங்கள் இந்த அடிப்படையைக் கொண்டுள்ளது. இவ்வரிய திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் ஆசிரியர்கள் பெரும் பொறுப்புடையவராவர் என்ருர்.

கல்வியின் தரம் ஆசிரியர்களின் தரத்தைப் பொறுத்தது. ஆசிரியரின் தரத்தைப் பற்றிய பிரச்னை எழும் பொழுது, அவர்கள் கவலையற்ற முறையில் வசதியாக வாழும் நிலையில் இருக்க வேண்டும். இப்பொழுதுள்ள நிலையில் மற்றத் துறைகளிலுள்ள அரசாங்க ஊழியர்கள் பெறும் அளவுக்கு இவர்களின் ஊதியத்தை உயர்த்துவது சாத்தியப்படாது. இங்குதான் சிக்கல்கள் தோன்றுகின்றன என்ருர்.

ராஜ்யத்தில் ஏற்கனவே ஒரு லட்சம் ஆரம்பப் பள்ளி ஆசியர்கள் இருக்கிருர்கள். கல்வி விஸ்தரிப்புக் கொள்கையினுல் ஆசிரியர்களின் எண்ணிக்கையை இருமடங்காக்க வேண்டியதிருக்கிறது. இதே விஷயம் உயர்நிலைப்பள்ளி விஷயத்திலும் பொருந்தும். இவ்வளவு எண்ணிக்கையுடைய ஆசிரியர்களைத் தயார் செய்யும் பிரச்னை எழுந்துள்ளது. கல்வி விஸ்தரிப்புக் கொள்கையைப் பற்றிப் பேசும் போது, கல்வித் தரம் குறைவதற்கு விடக்கூடாது. மறுபடியும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விஷயங்கள் முன் தோன்றுகின்றன. எனவே ஒன்றிற்கொன்று முரணுன இவ்விரு பிரச்னைகளை எப்படி சமாளிப்பது என்பதே ஒரு பிரச்னையாக இருக்கிறது. ஆகையால் இது விஷயத்தை மகாநாடு நன்கு ஆராய்ந்து உபயோககரமான யோசனைகளை சர்க்காருக்குத் தெரியப்படுத்துமாறு ஸ்ரீ சுப்பிரமண்யம் வேண்டிக் கொண்டார்.

ஆசிரியர் வேலையை ஒப்புக்கொள்ளும் போது அதிகச் சம்பளமுள்ள வேறு வேலைகள் அவர்கள் கவனத்தைக் கவராதவாறு பார்த்துக் கொள்வது அவசியம். அந்த நிலையை உடனே அடைவது முடியாத காரியம் என்ருலும், ஆசிரியர்கள் சேவா உணர்ச்சியுடன் பாடுபட வேண்டும் என்று மந்திரி கூறினர்.

சம்பளக் கமிஷன் அறிக்கையை சர்க்கார் பரிசீலித்து வருகிறது. ஆசிரியர் சம்பள விஷயத்தையும் கமிஷன் கவனித்துள்ளது. மேலும் ஆசிரியர்களின் கஷ்டநஷ்டங்களைத் தெரிந்த முன்னுள் ஆசிரியர் இருவரும் கமிஷனில் அங்கம் வகிக்கிருர்கள் என்ருர்.

திறமையுடைய தலைமை ஆசிரியர்கள் உள்ள பள்ளிக்கூடங்களில் வேலைபார்க்கும் ஆசிரியர்களும் திறன்மிக்கவர்களாக இருக்கிருர்கள். எனவே திறமை வாய்ந்ததலைமை ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்ருர். ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். போன்று தலைமை ஆசிரியர் பதவிக்கும் நேர்முகமான தேர்வு முறை இருப்பது நல்லது என்ருர்.

ஒவ்வொரு தாலுகாவிலும் முன் மாதிரியான பள்ளிக் கூடங்கள் அமைத்து புது முறைக் கல்வியைப் புகுத்துவதைப் பற்றி மகா நாட்டின் கருத்தைத் தாம் அறிய விரும்புவதாக ஸ்ரீ சுப்ரமணியம் மேலும் தெரிவித்தார்.

* * *

நகரசபைத் தலைவர் ஸ்ரீ தேவசகாயம் தேசீயக் கொடியேற்றினர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ டி. சுந்தரம் செட்டியார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் சமயக் கல்விக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

ஆரம்ப ஆசிரியர் மகாநாடு—19, 20 மே, 1960

குலசேகரபட்டினம் ஸ்ரீ என். வெங்கடாஜலமய்யங்கார் தலைமை வகித்தார். ஸ்ரீ மகாதேவய்யர் வரவேற்புரை கூறினார்.

ஸ்ரீ வெங்கடாஜலம் அய்யங்கார் தனது தலைமைப் பிரசங்கத்தில், ஆரம்ப ஆசிரியர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திவிட்டு, ஆசிரியர்கள் வேலை நிலைமைப்பற்றிக் குறிப்பிடுகையில் மானேஜ்மெண்டு பள்ளிகள் சிலவற்றில் நிர்வாகிகள் லஞ்ச ஊழல்களிலீடுபட்டிருப்பதை உடனடியாக தவிர்க்க வேண்டுமென்றும், வீவு வசதிகள் ஒழுங்காக இருக்க வேண்டுமென்றும், ஆசிரியர்களுக்கு அதிகமாக தற்போதுள்ள வேலைபளு குறைக்கப்பட வேண்டுமென்றும், சம்பளம் தாமதமன்னியில் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்றும் கூறினார்.

பள்ளிகளில் தரம் குறைந்திருப்பது உண்மை என்றும், இந்நிலை மாற ஆசிரியர்கள் கடமையுணர்ச்சியுடன் வேலை செய்ய வேண்டுமென்றும், அவ்வப்போது ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி கொடுக்க வேண்டுமென்றும் கூறினார். தனியார் பள்ளிகள் திறம்பட செயல்பட வேண்டுமென்றும், ஒரு சில மானேஜ்மெண்ட் பள்ளிகளின் கெட்ட நடவடிக்கையின் காரணமாக எல்லா தனியார் பள்ளியையும் அரசாங்கம் எடுத்துக்கொள்வதென்பது ஒவ்வாததென்றும், தனியார் பள்ளிகள் சீர்பட நல்ல முறையில் இயங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் தொகுதிக்கான தேர்தல்களில் ஆரம்ப ஆசிரியருக்கு வோட்டுரிமை வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்தினார்.

சங். இக்னேஷியஸ் பேசுகையில் குருபக்தியின் மேன்மை பற்றியும் ஆசிரியத் தொழிலின்சிறப்புப்பற்றியும் குறிப்பிட்டார். கல்வியில் ஆன்மவளர்ச்சியின் அவசியத்தை வலியுறுத்தி இந்தபண்பை மாறாமல் நடத்த ஆசிரியர்களால்தான் முடியுமே தவிர மாறுதல்களுக்குட்பட்ட அரசினர்களால் இத் தொண்டைச் செய்ய இயலாதென்றும், எனவே இப்பணியைச் செவ்வனே செய்ய தனியார் துறை பள்ளிகளே அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் தொழிற் சங்க ரீதியில் ஈடுபடுவது நல்லதல்லவென்றும், எனவே ஆசிரியர்களிடமுள்ள தொழிற் சங்க மனப்பான்மை அகல வேண்டுமென்றும் கூறினார்.

ஸ்ரீ ராஜாமணி, திருச்செந்தூர் தாலுகா ஆரம்ப ஆசிரியர் சங்க காரியதரிசி ஸ்ரீ ஆர். எம். கணபதி ஆகியோர் ஆரம்ப ஆசிரியர் குறை, புதிதாக 5-ம் வகுப்பில் ஆங்கிலம் ஏற்படுவதால் பாதிக்கப்படும் ஆசிரியர்கள் நிலை பற்றிப் பேசினார்கள்.

வரும் ஜூன் மாதம் முதல் ஆரம்பப் பள்ளிகளில் 5-வது வகுப்பில் ஆங்கிலம் போதிக்கப்படப் போவதால், அதற்கு செகண்டரி கிரேடு ஆசிரியர் நியமிக்க வேண்டியிருப்பதால் இதனால் ராஜ்யத்தில் சுமார் 2000 ஹையர் கிரேடு ஆசிரியர்கள் வேலை இழக்க நேரிடுமென்ற நிலைமை ஏற்படுவது பற்றியே குறிப்பாக எல்லோராலும் பேசப்பட்டது.

ஸ்ரீ டி. செபஸ்டியன் ஆசிரியர்கள் ஐக்யமாக இருக்க வேண்டியதின் அவசியம் பற்றியும், சங்கத்தை பலப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் பேசினார்.

திருநெல்வேலி ஸ்ரீ சுப்ரமணியன் ஒரு கிரேடு ஆசிரியருக்கும் மற்றொரு கிரேடு ஆசிரியருக்குமிடையே ஏற்றத் தாழ்வு மனப்பான்மை நிலவுவது ஒழிய வேண்டுமென்றும், கல்வி முறைகளை அடிக்கடி மாற்றுவது உகந்ததல்ல என்றும், ராஜ்யத்துக்கு ஒரு கல்வி போர்டை அமைத்து கல்வி சம்பந்தமான சகல விஷயங்களை அதனிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

நாகப்பட்டினம் ஸ்ரீ ஜி. ஜே. ஜெயநாதன் பேசுகையில், உற்பத்தி செய்யப்படுகிற எல்லா ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்பு

களை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டு மென்றும், இப்படி செய்தால் தனியார் பள்ளிகளில் ஏற்படும் பலஊழல்கள் மறையு மென்றும் கூறினுர். ஆசிரியர்களுக் கேற் படும் குறைகளை சங்கத்தின் மூலம் தீர்த் துக்கொள்ள முற்பட வேண்டுமென்ருர். ஆசிரியர்கள் திறம் உயர அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஏதாவது அளிக் கப்பட வேண்டுமென்றும், அடிக்கடி மறு பயிற்சிகளும் கருத்தரங்குகளும் நடத்தப் பட வேண்டுமென்றுங் கூறினுர்.

ஸ்ரீ பேரின்பராஜ் ஆரம்பப்பள்ளிகளில் வரும் ஆண்டிலிருந்து செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்ற சர்க்கார் உத்திரவின் காரணமாக பல ஹையர் கிரேடு ஆசிரியர்கள் வேலை இழக்க நேரிடும் நிலைமையை அரசாங்கம் ஏற் படுத்தி விட்டதென்றும், இந்தத் தவறை தவிர்க்க தென் இந்திய ஆசிரியர் சங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, இந்த கஷ்ட நிலைமைக்கு நிவாரணம் தேடித்தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

சேர்மா தேவி ஸ்ரீ எஸ். ஆர். நாராயண ராவ், ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ஆங்கி லம் சொல்லித்தரக் கூடாதென்ற நிபந் தனையை நீக்கி, ஆங்கிலம் தெரிந்த ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு இந்த அனுமதி கொடுக்க வேண்டுமென்றும், சர்க்காரின் இப் புதிய உத்தரவால் பல பள்ளிகளில் வேலை செய்யும் கணவன், மனைவிமார்கள் வெவ்வேறிடங்களில் பிரிந்து வாழும் நிலை யும் ஏற்படுகிறதென்றும், இந்நிலைமை எல் லாம் தவிர்க்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினுர்.

ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். சி. பேசுகையில் கூடிய சீக்கிரம் 1000க் கணக் கான ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப் படும் வயிற்றெரிச்சல் நிலைமை இருந்து வருகையில் இம்மகாநாட்டை “பொன்விழா கொண்டாட்ட” மென்று கூறிக்கொள்வது வருத்தப்படக் கூடியதென்றும், ஆசிரியர் கள் அனைவரும் நேற்று கல்வி மந்திரி முன் கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் நடத்தி நம் வயிற்றெரிச்சலைத் தெரிவித்துக் கொண் டிருக்க வேண்டுமென்றும், தஞ்சையில் ஸ்ரீ காமராஜ் முன்பு கூடிய சீக்கிரம் ஆசிரி யர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாயும் கூறினுர். அரசாங்கம் இங்கு பல ஆசிரி யர்கள் வேலை இழக்கச் செய்யும் வயிற் றெரிச்சலை ஏற்படுத்தி விட்டு, இந்தியா முழு தும் கல்விச் சீர்திருத்தம் மிகச் செய்து விட் டதாகப் பெருமிதப்படுத்திக் கொள்வது வருந்தக்கூடியதென்ருர். ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ஆங்கிலம் போதிக்க தகுதி இல்லை என்று கூறுவது சரியல்ல என்றும், இதை ஏற்கும் வகையில் தென்னிந்திய ஆசிரியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றப் பட்டால் அது பெரும் இழுக்காகும் என் றும் அரசாங்கத்தை மிக உத்வேகமாக கண்டித்துப் பேசினுர்.

இந்த ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இழுக்கு மாறும் வகையில் எங்கிருந்து கிளர்ச்சி ஆரம்பித்தாலும், எல்லா இடங்களிலுள்ள ஆசிரியர்களும் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான்கள் ராஜாராம், ஜேம்ஸ், மாரி முத்து, ராஜகோபாலன் ஆகியோரும் பேசி னர்.

தலைவர் தனது முடிவுரையில் ஆசிரியர் கள் ஐக்யமாக இருக்க வேண்டுமென்றும், தங்கள் குறை தீர காந்தீய வழியையே பின் பற்ற வேண்டுமென்றும், கிளர்ச்சி என்ருே, கருப்புக்கொடி ஆர்ப்பாட்ட மென்ருே, நேரடி நடவடிக்கை என்ருே ஈடுபட்டால் அது பேராபத்தென்றும் எச்சரித்தார்.

தென்னிந்திய ஆசிரியர் சங்க தலைவர் ஸ்ரீ டி. பி. சீனிவாசவரதன் எம். எல். சி. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு எழுந் துள்ள கஷ்டம் பற்றி தான் தக்க நட வடிக்கை மேற்கொண்டுள்ளதாயும் மேலும் தொடர்ந்து ஆவன செய்வதாயும் தெரிவித் துக் கொண்டார்.

ஸ்ரீ டி. செபஸ்டியன் வந்தனுேபசாரம் கூறினுர்.

20—5—'60 அன்று நடந்த செகண்டரி கல்வி விவாதத்தின் அறிக்கை

செகண்டரி கல்வி சம்பந்தமானப் பிரிவுக் கூட்டம் திரு. S. நடராஜன், B.A., L.T., M.L.C. தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது துவக்க உறையில் கல்வி விஷயத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பல மாறுதல்களைப் பற்றியும் தற்பொழுது ஏற்பட்டுள்ள செகண்டரி கல்வி சீர்திருத்தங்களைப் பற்றியும் கூறினார்.

இச்செகண்டரி கல்விப் பிரிவில் மூன்று விஷயங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. முதலாவது தற்பொழுதுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல் செகண்டரிப் பள்ளிகளாக உயர்த்துவது, இரண்டாவது பொறியியல் கல்வி, விவசாயம் போன்ற கல்வியைப் (Diversified Course) புகுத்துவது, மூன்றுவது செகண்டரி கல்வியை ஒழுங்கு படுத்தும்பொழுது ஏற்படும் ஆசிரியர்களின் நிலை.

இவ்விவாதத்தை திரு M. ராஜா அய்யர் துவக்கி வைத்துப் பேசும்பொழுது உயர்நிலைப் பள்ளிகள் மேல் செகண்டரி பள்ளிகளாக உயர்த்தப்படும்பொழுது ஏற்படும் கஷ்டங்களைப் பற்றிக் கூறினார். பரீட்சைகளைப்பற்றி பேசும்பொழுது பத்தாவது வகுப்புடன் தங்கள் படிப்பை முடித்துக் கொள்ளும் நோக்கமுடைய மாணவர்களுக்கு அவ்வருடக் கடைசியிலேயே சர்க்கார் பரீட்சை வைக்கலாம் என்றும், ஆனல் பதினொன்றுவதுவரை படிக்க விரும்பும் மாணவர்களுக்கு அவ்வருடக் கடைசியில் சர்க்கார் பரீட்சை வைத்துக்கொள்ளலாம் என்றும், இம்மாணவர் பத்தாவது வகுப்பிலிருந்து பதினொன்றுவது வகுப்புச் செல்ல அந்தந்த பள்ளிகளுடைய தேர்வு முடிவுகளையே எடுத்துக்கொள்ளலாம் என்றும், பதினொன்றும் வகுப்புகளை L.T. ஆசிரியர்களே நடத்தலாம் என்றும் கூறினார்.

திரு B. சீனிவாச அய்யங்கார் பேசும்பொழுது பதினொன்றும் வகுப்புகளை நடத்த 10 வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்ற L.T. ஆசிரியர்களே போதுமென்றும், தலைமை ஆசிரியர்கள் நேரிடையாக தெரிந்தெடுப்பது நலமில்லை என்றும், புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக பல ஆசிரியர்கள் வேலையை இழக்கலாம் என்றும், பாட திட்டத்தில் சமூக பாடத்திற்குப் பதிலாக பூகோளம், சரித்திரம் என்று தனித் தனி பாடங்கள் இருப்பதே நலமென்றும் கூறினார்.

திரு C. ரெங்கனத அய்யங்கார் பேசுகையில் கிராமங்களில் உயர்நிலைப் பள்ளிகள் தொடர்ந்து இருப்பது நலமென்றும், மேல் செகண்டரி பள்ளிகளில் விரிவுரையாளர்களை அமர்த்துவது ஆபத்து என்றும் கூறினார்.

திரு தெய்வநாயகம் பேசுகையில் கல்லூரிகளில் மாணவர்களின் ஒழுங்குக் குறைவிற்குக் காரணம் அந்நிய மொழி வாயிலாக கல்வி போதிக்கப்படுவதே என்றும், வட இந்தியாவிலுள்ள கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஏதாவது ஒரு தென்னிந்திய மொழி கட்டாயம் போதிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்கள்.

திரு C. L. கோவிந்தராஜன் பேசும்பொழுது கூறியதாவது: தலைமை ஆசிரியர்களை நேரிடையாக தெரிந்தெடுக்கக் கூடாது. பதினொன்றுவது வகுப்பை நடத்த அனுபவம் பெற்ற L. T. ஆசிரியர்களே போதும் என்றார்.

திரு S. சீனிவாசன் பேசுகையில் ஐந்தாவது வகுப்பு உயர்நிலைப் பள்ளிகளில் இருப்பது நலம் என்றும், புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக பல ஆசிரியர் வேலையை இழக்க நேரிடும் என்றும் கூறினார்.

ரெவரெண்டு தம்புசாமி தற்பொழுது ஏற்பட்டுள்ள கல்வி மாறுதல்களைப் பற்றியும், பள்ளிப் பாடத் திட்டத்தில் நல்லொழுக்க வகுப்புகள் கட்டாயம் இடம்பெற வேண்டுமென்றும் கூறினார்.

திரு G. சுந்தரம் பேசுகையில் L.T. பயிற்சி பெற்ற M.A. பட்டதாரிகள் பதினொன்றும் வகுப்பை நடத்துவது நல்லது என்றும், ஆசிரியர்கள் M.A. பரீட்சைக்கு கல்லூரிகளின் வாயிலாக அன்றி நேரிடையாக M.A. பரீட்சைக்கு உட்கார அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் தலைமை ஆசிரியர்கள் நேரிடையாக தெரிந்தெடுக்கக் கூடாது என்றும் கூறினார்.

திரு T. P. சீனிவாசவரதன் புதிய பாடத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள சில குழப்பங்களைப்பற்றி விவரித்துக் கூறினார்.

திரு கிருஷ்ணமூர்த்தி பேசியபொழுது புதிய வகுப்புகள் புகுத்தப்படும்பொழுது ஆசிரியர்களுக்கு ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி சுட்டிக் காட்டினார்.

திரு அருமைச் செல்வம் பேசுகையில் அரசாங்கம் தலைமை ஆசிரியர்களை நேரிடையாக தெரிந்தெடுப்பதை எதிர்ப்பதாகவும் அப்படி தெரிந்தெடுத்தால் முதலில் அரசாங்கம் தங்கள் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களை நேரிடையாக தெரிந்தெடுக்கலாம் என்றும், அம்முறை சிறந்ததாக அனுபவத்தில்

கண்டால் மற்ற பள்ளிகளுக்கு அம்முறையைப் பின்பற்றலாம் என்றும், ஒவ்வொரு ஜில்லாவில் மாதிரி உயர்நிலைப் பள்ளிகள் இருத்தல் நலமென்றும், ஆனால் அவைகளின் நிர்வாகத்தில் அதிக அரசாங்கக் கட்டுப்பாடு இருக்கக் கூடாது என்றும் கூறினார்.

திரு வீரசிவம் பேசுகையில் உயர்நிலைப் படிப்பு முடியும்வரை தன்னம்பிக்கையுள்ள கடவுள் பக்தியுள்ள பண்பாடு நிறைந்த சமயக் கல்வி வேண்டுமென்று வலியுறுத்தினார். நேரிடையாக தலைமை ஆசிரியர்களை தெரிந்தெடுக்க கல்வி மந்திரி யோசனை செய்யச் சொன்ன காரணம் மிகவும் சுறு சுறுப்பான இளைஞர்களை நிர்வாக விஷயத்தில் கொண்டு வருவதற்காக இருக்குமெனக் கூறினார்.

திரு சுப்பிரமணிய முதலியார் பேசும்பொழுது தலைமை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள நிர்வாகச் சிக்கல்களைப் பற்றிக் கூறினார்.

திரு முத்துசாமி Certificate Course-க்கு அனுப்பப்படும் ஆசிரியர்களுக்கு எல்லாவிதமான சம்பள Stipend சலுகைகள் அரசாங்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திரு இளமாறன் பேசும்பொழுது பதினொன்றாவது வகுப்பை நடத்த அனுபவம் பெற்ற L. T. ஆசிரியர்களே போதுமென்றும் புதிய திட்டத்தின் காரணமாக சிலர் வேலையை இழக்கநேரிடும் என்றும் கூறினார்.

திரு A. ராஜகோபாலன், திரு வரதராஜன், திரு A. ராமச்சந்திரன் முதலியோர்கள் தலைமை ஆசிரியர்கள் நேரிடையாக தெரிந்தெடுக்கப்படுவது நலமில்லை என்றும் கூறினார்கள்.

கடைசியாகப் பேசிய திரு அவதானியார் சமயக் கல்வி தற்காலத்தில் மிக அவசியமெனக் கூறினார்.

தலைவர் தமது முடிவுரையில் கூறியதாவது: செகண்டரி கல்வி விஷயத்தில் பல சிக்கல்கள் உள்ளபோதிலும் அவைகளுக்கு தீர்வுகாண கடினம் இல்லை என்றும், ஆசிரியர்கள் மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை பிறர் அறிந்துகொள்ள வேண்டுமென்றும், செகண்டரி கல்வி ஒரு விசேஷக் கல்வி கட்டமாகும் என்றும், இக்கூட்டத்தில் ஆசிரியர்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் பாட திட்டங்கள் வகுக்கும் உரிமை அவசியம் என்றும் சுட்டிக் காட்டினார்.

திரு N. ராஜகோபாலன் நன்றி கூற கூட்டம் முடிவு பெற்றது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. This Conference resolves to request the Government to adopt the scales of pay recommended by the South India Teachers' Union at the 49th Madras State Educational Conference held at Salem in 1959.

2. This Conference reiterates its view that nationalisation of publication of text books is against the interests of education and development of the nation.

3. This Conference reiterates that the pension rate should be one-third of the average salary drawn during the last three years before the age of superannuation or the last three years of service whichever is higher, subject to a minimum of Rs. 30/- per month.

4. This Conference resolves that the teachers of all grades shall be granted increments during their extension period so as to enable them to get their maximum pay before they retire.

5. This Conference resolves to request fee concessions granted to N.G.O.'s and teachers be extended to teachers employed in colleges on similar conditions. It further requests that the income limit of Rs. 300/- per month be dropped.

6. This Conference reiterates its request to Government to fix the age of retirement at 60 for all teachers under all managements.

7. This Conference requests the Government to introduce uniform leave rules to be followed by the different managements and see that the managements conform to them.

8. This Conference requests the Government to grant a duty allowance of Rs. 10/- per month to the Headmasters of Elementary Schools and Rs. 15/- per month to Headmasters of Higher Elementary Schools.

9. This Conference resolves to request the Department, the Government, and the University to permit experienced trained graduate teachers and others permitted to teach in the High School classes of not less than 10 years standing to handle the XI standard in Higher Secondary Schools.

10. This Conference resolves to request the Government to permit all teacher-pensioners to draw their pension during the period of re-employment in Government service or in recognised schools subject to the condition that the total emoluments do not exceed last pay drawn.

11. This Conference resolves to request the Government to extend educational concessions to children of the teaching and non-teaching staff up to the college level.

12. This Conference resolves to request that a peon may be allowed in elementary schools of strength 250 and above, and a clerk if the strength exceeds 350.

13. This Conference resolves that an advance payment of two months' salary be made to teachers as festival advance and the same recovered in ten monthly instalments as in the case of the N.G.O.s'.

14. This Conference views with deep regret that in spite of frequent requests to the Government to grant house rent allowance to teachers nothing has been done so far. This Conference presses the need for granting House Rent Allowance to all teachers without further delay.

15. This Conference requests the Government to amend the Provident Fund Rules so that a teacher's contribution should not be less than 10 nP. in the rupee and the management and the Government should each be made to contribute 5 nP. in the rupee and the Government's contribution should be made at the end of each year. This Conference further requests the Government to permit the teachers to contribute up to 15 nP. in the Rupee.

16. This Conference resolves to request the Government to include all elementary school teachers in the Teachers' Constituency of the Madras Legislative Council.

17. This Conference appreciates the assistance given for meeting the travel costs when teachers and students go on excursion and it requests that the grants may be made liberal to cover incidental and other necessary expenses. This concession may be extended to elementary and special schools.

18. This Conference resolves to request to Government to grant free building scheme for teachers to build their own houses at the places where they serve and also help managements to build residential quarters for teachers and clerical staff.

19. This Conference reiterates its requests to Government to grant free medical aid to teachers under all agencies on lines similar to those to Central Government employees.

20. This Conference resolves to request the Government to give effect to the pension scheme to all retired teachers, even to those who retired before 1st April 1955.

21. This Conference resolves to request the Government to adopt the pupil-teacher ratio 25 : 1 in all elementary schools.

22. This Conference requests the Government to allow Secondary grade scale of pay to such of the higher grade teachers as pass the Secondary grade training, under whatever agencies they serve, as this will act as an incentive to such teachers to improve their professional qualifications which in turn will bring greater efficiency in the method of teaching.

23. This Conference requests the Government of Madras to enforce the rule that the scale of pay of secondary grade teachers to elementary school teachers of all agencies who passed T.S.L.C. Examination should be allowed from the next day after the last day of the T.S.L.C. Examination.

24. This Conference resolves to request the Government to enable the Department of Extension Services in the State to pay Travelling Allowance and Daily Allowance to the partici-

pants of the Seminar, Refresher Courses, etc., conducted by them.

25. This Conference resolves to request the Government to provide rules for the security of service for the members of the non-teaching staff (clerks, attenders, etc.) in aided institutions including colleges.

26. This Conference resolves to request the Government to sanction at least one post of upper division clerk in high schools for every 500 pupils and part thereof and an office manager where the strength exceeds 1,500.

27. This Conference resolves to request the Government to extend the pension-cum-insurance scheme to the non-teaching staff in all educational institutions including colleges.

28. This Conference is of opinion that the syllabus in the subjects of Mathematics, Science and Social Studies for Secondary Schools are ambiguous and need revision. It requests the Executive to examine and make suitable recommendations.

29. This Conference requests the Madras and Annamalai University authorities to introduce Agriculture group and Commerce group in the Pre-University Course.

30. This Conference urges upon the Government that for ensuring the progress of education, a State Board of Education consisting of representatives of the Legislatures and organised teaching profession, be set up.

31. This Conference further requests that with a view to stepping up the quality of education in our elementary schools and at the same time ensure the fulfilment of the constitutional directive in regard to the introduction of Free Compulsory Education an autonomous Council of Elementary Education be set up for this State with representatives of the Education Department, Local Bodies and the organised teaching profession to undertake programmes of in-service training for teachers in elementary schools, to study problems connected with elementary education, to periodically review the progress and advise Government on measures to be taken for ensuring qualitative and quantitative improvement in elementary education.

32. This Conference resolves to request the Government to lay down as its policy that before 1st April 1961, every aided elementary School should have a committee of management registered under the Societies Registration Act, as one of the Conditions of recognition, and where a number of schools are managed by an agency there may be one committee of management constituted for all such schools.

33. This Conference is of opinion that the selection of text books in the case of municipal elementary schools, should be entrusted to a committee of teachers of elementary schools constituted for each Municipality.

34. This Conference is of opinion that completed S.S.L.C.'s with higher grade training may be permitted to appear privately for the T.S.L.C. Examination.

35. As English is to be taught in Standard V from 1960-61 and as there are number of higher grade trained teachers with completed S.S.L.C. with more than ten years of service, this Conference is of opinion that such teachers should be given refresher course in the content of English and also in the teaching of English. Such teachers after undergoing the course successfully should be placed on a par with Secondary grade teachers as regards pay and other privileges.

36. This Conference impresses on the Government the need for constituting a statutory salary negotiating Committee, like the Burnham Committee in England, consisting of representatives of teachers of primary schools and Secondary schools, headmasters, representatives of managements of aided schools and of local bodies, Municipalities and District Board Schools, to recommend uniform scales of pay superannuation benefits and conditions of service from time to time.

37. This Conference learns with regret that in the case of teachers for whom salaries are paid direct, their

provident fund contributions have not yet been remitted in their accounts in the Post Office Savings Bank, thus causing loss of interest to the teachers and also preventing them from taking P.F. advances for payment of compulsory insurance. Therefore it requests the Government to make arrangements for regular monthly remittances.

38. This Conference requests the Government to pay the teachers who are now receiving direct payment the salaries according to the salaries entered in the Teachers' Service Registers.

39. This Conference requests the Government to take steps to expedite provident fund closure and granting of pension within a period not exceeding 6 months.

40. While welcoming the steps taken by the Madras Government to introduce Tamil as the medium of instruction in the courses relating to humanities of the B.A. degree courses as a pilot project in the Government Arts College, Coimbatore, this Conference urges upon the Government to ensure

(a) that the autonomy of the Universities is not impaired thereby,

(b) that the results of the Pilot project be carefully reviewed before it is extended to other colleges and to other subjects.

(c) that the adoption of Tamil as the medium of instruction in colleges other than the Government Arts College, Coimbatore, be optional, such colleges being given all facilities and due encouragement and

(d) that in no case financial aid is denied to colleges continuing to give instruction through the medium of English.

41. This Conference is of opinion that the present teachers' constituency covering the whole State is an unweildy one and hence it requests the Government to divide it into 3 regions, each region electing two representatives.

42. This Conference requests the Government to grant 50% of the amount standing to the credit of a teacher in the Provident Fund amount for the purchase of a site or house or constructing a building.

43. This Conference views with grave concern that as a consequence of the new Educational policy of the State requiring a Secondary grade trained teacher to be appointed in every Elementary School to teach English in standard V, many managements of aided elementary schools and local bodies have issued notices of termination of the services of several hundreds of Higher Elementary grade trained teachers. The Conference notes the Government communique in this connection and feels that it does not adequately meet the situation. It therefore urges upon the Government that their order be modified so as to require all the managements and local bodies to retain all those teachers in service.

44. This Conference requests the Government to grant first grade scale to pandits of languages in high schools without insisting upon 17½ hours of language work per week in high schools.

CONDOLENCE RESOLUTION

This Conference learns with great sorrow the demise of Sir Muhamad Usman, Sri G. Harisarvothama Rao, Sri M. K. Shanmugam, Sri Sriramulu, Sri A. B. Shetty, Sri K. V. Rangaswamy Iyengar, Sri E. M. Gopalakrishna Kone and Purushothama Iyengar of Srivaikuntam who did great service in the field of education and to the teaching profession.

பத்திராதிபர் குறிப்புகள்

மதுரை மகாநாடு :

வைகாசி மாதத்தில் மதுரை மாநகரில் தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் 50-வது கல்வி மாநாடு வெகு சிறப்பாக நடந்தது. மதுரை மாவட்ட ஆசிரியர் கழகத்தின் ஆதரவில் ஒரு வரவேற்புக் கமிட்டி நிறுவப்பட்டது. இந்த வரவேற்புக் குழுவின் தலைவர் திரு. கரிமுத்து சுந்தரம் செட்டியார். கல்விக்கே பணி செய்வது என்ற உறுதியுடன் தொண்டாற்றி வருபவர் அவர். உவந்து பொறுப்பேற்று, மாநாட்டின் வெற்றிக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார். பிரதிநிதிகள் தங்குவதற்கும், போஜனத்திற்கும் நல்ல வசதிகள் இருந்தன. தமது வரவேற்புரையில் அவர் கல்விப் பிரச்னைகளின் நுணுக்கலான விஷயங்களை எடுத்துக் காட்டி மாநாட்டின் வெற்றிக்குக் காரணராயிருந்தார்.

கனம் கல்வி அமைச்சர், திரு. C. சுப்ரமணியம் மாநாட்டைத் துவக்கி வைக்கையில் ஆசிரியப் பிரதிநிதிகளின் ஆலோசனைகளைத் தான் மிகவும் விரும்புவதாகவும், சில பிரச்னைகளைத் தெரிவித்து, இவைகளை எவ்வாறு தீர்க்க வேண்டியது என்பதற்கு அவர்களின் முடிவான ஆலோசனைகளைத் தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தது அவருடைய பெருந்தன்மையையும், கல்விப் பிரச்னைகள் ஜனநாயக முறையில், கல்வி நிபுணர்களின் ஆலோசனையின் பேரில், அரசியல் குழப்ப மில்லாமல் தீர்க்கப்பட வேண்டிய தென்னும் நோக்கத்தையும் நன்கு தெளிவுப்படுத்தியது. ஆசிரியர் சம்பள திட்டத்தைப் பற்றி கூறுகையில், சம்பள கமிஷன் சிபார்சுகள் ஆசிரியர்களுக்கு மிகவும் திருப்தி அளிக்கக் கூடும் என்று தான் நம்புவதாகத் தெரிவித்தார். அதே சமயத்தில் கல்வியின் தரம் உயர வேண்டியதின் அவசியத்தையும் தெளிவுற எடுத்துக் காட்டினர்.

மாநாட்டுக்குத் தலைமை வகிக்க பேராசிரியர் அ. சிதம்பரநாதர் இசைந்தது, ஆசிரியர்களின் பெரும்பாக்கியம் என்றே கருத வேண்டும். பல ஆண்டு அண்ணமலைப்பல்கலை நிலையத்தில் தொண்டாற்றி மிகுந்த அனுபவம் வாய்ந்தவர். ஆசிரியர் தொகுதியில் தேர்ந்தெடுத்த சென்னை மேல் சபை அங்கத்தினர். ஆசிரியர்களின் பல பிரச்னைகளை நன்கு அறிந்தவர். ஆசிரியர்பால் மிக அனுதாபம் கொண்டவர். ஆசிரியர்களிடம் மிக மரியாதை கொண்டவர். பல்கலைப் படிப்பு தாய்மொழி மூலம் போதிக்கப்பட வேண்டும் என்னும் உறுதி கொண்டவர். எனினும் நாட்டின் தற்கால நிலையையும், தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வையும் நன்கு யோசித்து, நிதான முறையைக் கையாள வேண்டும் என்றும், எந்த மாறுதலும் புரட்சிகரமாக இல்லாமல் வளர்ச்சி முறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் இவர்கூறியதை அரசாங்கமும் ஆசிரியர்களும் கவனித்து நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம். தவிர மாநாட்டின் பல பகுதிகளில் கலந்து கொண்டும் ஆசிரியர் பிரதிநிதிகளுடன் உரையாடியும் விஷயாலோசனைக் கமிட்டியில் பங்கெடுத்துக் கொண்டும், தீர்மானங்களை செவ்வனே அமைத்துக் கொடுத்தும்,மாநாட்டிற்கு உண்மையான தலைவாராயிருந்து மாநாட்டைச்சிறப்பாக நடத்தித்தந்தார். தென் இந்திய ஆசிரியர் சங்கம் இவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. 50 ஆண்டு கழித்த ஆசிரியர் சங்கத்திற்கு, இப் பெரியாரின் சேவை மிக அவசியமாக இருக்கின்றது. சங்கத்திற்கு பெருந்துணைவராக இருந்து தொண்டாற்றுவார் என நம்புகிறோம்.

ஆண்டுதோறும் உள்ள பிரிவுகளேயன்றி இவ்வாண்டு விசேஷமாகக் குறிப்பிட வேண்டியவை பெண்கல்வி மாநாடும் ஆரம்ப ஆசிரியர் மாநாடும் ஆகும்.

மாநாட்டுத் தீர்மானங்களில் பல ஆசிரியர்களின் குறைகளை எடுத்துச் சொல்வனவே என்றாலும், சில கல்வி சீர்திருத்த தீர்மானங்கள் கவனிக்கத் தக்கவை.

பர்ன்ஹாம் கமிட்டி போன்ற ஒரு நிரந்தரக் குழு ஆசிரியர்களின் சம்பளச் சிக்கல்களை அவ்வப் பொழுது தீர்க்க

ஏற்படுத்த வேண்டும் என்பதும், ராஜ்யக்கல்வி போர்டு ஏற்படுத்துவதைப் பற்றியும், ஆரம்ப ஆசிரியர்களுக்கு புனர் பயிற்சி அளிக்க ஒரு திட்டமும் மாநாடு கொடுத்துள்ளது. இவற்றை அதிகாரிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஹையர் கிரேடு ஆசிரியர்கள்

இவ்வாண்டு முதல் ஐந்தாம் வகுப்பில் ஆங்கிலம் ஒரு கட்டாயப் பாடமாக இருப்பதின் காரணமாக சில ஸ்தல ஸ்தாபனங்களும் தனிப்பட்டார் நடத்தும் பள்ளி மானேஜ்மெண்டார்களும் சில நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு நோட்டீஸ் கொடுத்துள்ளதின் காரணமாக பல ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படும் நிலை ஏற்பட்டது. மதுரை மாநாட்டிலே இதைப்பற்றி பெருங் கவலை ஏற்பட்டது. மாநாட்டின் தீர்மானப்படி கனம் கல்வி அமைச்சருக்கு இந்நிலை தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது.

1959-ஆண்டிலேயே அரசாங்கம் இது விஷயமாக உத்திரவு பிறப்பித்துள்ளது. ஆங்கில பாடத்தின் காரணமாக ஒரு ஹையர் கிரேடு ஆசிரியரும் வேலையிலிருந்து நீக்கப்படக் கூடாது என்று அதில் கண்டிருக்கிறது. எனினும் மாநாட்டின் வேண்டுகோளுக்கு இசைந்து அரசாங்கம் புதிய உத்தரவு வெளியிட்டுள்ளது ஆசிரியர்களுக்கு மிகத் திருப்தி அளிக்கும். சென்ற இதழில் இதை நாம் குறிப்பிட்டிருந்தோம். பின்னுல் பரிகாரம் செய்வதைக் காட்டிலும் முன்கூட்டியே நிலையை சமாளிக்க முயல வேண்டும் என்பதற்கிணங்க அரசாங்கத்தார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திராதிபர் அறிவிப்பு

25 ஆண்டுகளாக இப்பத்திரிகைக்கு பத்திராதிபன் என்ற முறையில் தொண்டாற்றினேன்; இன்று இதிலிருந்து விலகும் காலம் ஏற்பட்டுள்ளது. 1936 ஏப்ரல் மாதத்தில் "**பாலர் கல்வி**"யின் முதல் தொகுதி ஆரம்பமாயிற்று. இதை ஆரம்பிக்கும் காலத்தில் நிர்வாகக் கமிட்டி ஆழ்ந்த யோசனையின் பேரில்தான் முடிவுக்கு வந்தது. ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள திட்டங்கள் வேலை நிபந்தனைகள் முதலியன மிகவும் கேவல நிலையிலிருக்கின்றன. அவர்கள் ஒன்று சேர்ந்தால் தான் இக்குறைகளை ஒருவாறு நீக்க முடியும் என்றும் அந்த நிலை ஏற்படுத்த ஒரு பத்திரிகை வேண்டும் என்றும் நிர்வாகக் கமிட்டி உணர்ந்து, "**பாலர் கல்வி**"யை வெளியிட முயற்சி எடுத்துக்கொண்டது. ஆரம்பக் கல்வி, கல்விக்கே அடிப்படையானது. 80–90 சதவீத மாணவர்களுக்கு அதுவே ஆயுள் கல்வியாகும். எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும், ஆரம்பக் கல்வி ஆதாரமானது. இதன் தரம் மிக உயர்ந்ததாக இருக்கவேண்டும். இதை உணர்ந்து நிர்வாகக் கமிட்டி துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் வேலை மேம்படக்கூடிய அளவில் "**பாலர் கல்வி**"யில் கட்டுரைகள் வெளி வர வேண்டும் என்று விரும்பியது. இப்பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு நூல்நிலைய வசதிகளோ, தகுதியான கல்வி பத்திரிகைகளோ கிடையா. எனவே, அவர்களின் தொழில்திறமை அதிகரிக்க, மற்ற ஆசிரியர்களின் அனுபவங்களும், கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும், "**பாலர் கல்வி**" மூலம் அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்ற முடிவின்படி இப்பத்திரிகை துவக்கப்பட்டது.

ஆரம்ப ஆசிரியர்களின் பொருளாதார நிலையின் காரணமாகவும், நமது சங்கத்தின் சக்திக் குறைவினுலும் "**பாலர் கல்வி**"க்கு எதிர்பார்த்த அளவுக்கு ஆதரவு ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கவில்லை என்பதை வருத்தத்துடன் உணருகிறேன். எனினும், "**பாலர் கல்வி**" ஆசிரியர்களின் கஷ்டங்களை எடுத்துரைப்பதிலும், அவைகளை நீக்கும் பணியிலும், ஆசிரியர்கள் முன்னேற்றத்திற்கு ஆவன செய்வதிலும் சற்றும் சலிக்காமல் தன் பணியைத் தீவிரமாகச் செய்து வந்துள்ளது என்ருல் அது மிகையாகாது.

எனினும், மதுரையில் நடந்த பொதுக் கூட்டத்திலும், ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டிலும், கிளர்ச்சி மனப்பான்மையே ஓங்கி இருந்தது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் புரட்சிமுறை வேண்டும் என்றும், கல்விக் கட்டுரைகளுக்கு "**பாலர் கல்வி**"யில் இடமில்லை யென்றும், அதில் முக்கியமாக ஆசிரியர்

Regd. No. M. 3473

Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

களின் பட்டினிக் கோலத்தையே வர்ணிக்க வேண்டுமென்றும் கூறியது எனக்கு வியப்பைத் தருகின்றது. ஆயினும், அக்கொள்கைக்கு மாநாட்டில் ஆதரவு காணப்பட்டதன் காரணமாக, நான் இப்பதவியினின்று விலகிக்கொள்வது நலம் என்று அறிந்து அவ்வாறு செய்ய தீர்மானித்துள்ளேன். புரட்சியும் கிளர்ச்சியும் மனத்திற்கு ஓரளவு தற்காலீக சந்தோஷம் கொடுக்கும். வளர்ச்சியே நிரந்தரமான சந்தோஷத்தையும், திருப்தியையும் தரும் என்பது எனது கருத்து.

இந்த சமயத்தில் பொதுஜனங்களும் அரசாங்கத்தாரும் ஆரம்ப ஆசிரியர்களின் பணியின் மேன்மையை உணர்ந்து, அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அளித்து அவர்களுடைய வற்புறுத்தலுக்கு ஓர்அளவு இணங்கி வருகிருர்கள். இதை நாம் பயன்படுத்திக் கொள்வோமாளுல் நமக்கு பல நன்மைகள் உண்டாகும் என்பது திண்ணம்.

நாட்டின் எல்லேயில் விரோதிகள் குவியும் இக்காலத்தில், புரட்சிகரமான கிளர்ச்சிகள் நாட்டின் அமைதியைக் குலேக்கும். அதுவும் எளிய மாணவர்களிடம் தொடர்புகொண்ட ஆசிரியர்கள் இதில் ஈடுபட்டால் நாட்டின் பிற்கால வாழ்வு சீரழியும் என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும்.

இவ்விருபத்தைந்து ஆண்டுகளாக ஆதரவளித்த சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு உதவியாக தொண்டாற்றி வரும் ஸ்ரீ C. ரங்கநாத அய்யங்கார், ஸ்ரீ G. சீனுவாசாச்சாரியார், ஸ்ரீ V. பூவராக மூர்த்தி ராவ் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தனே நாளாக எனக்கு பத்திரிகை ஆசிரியன் என்ற பதவி அளித்து, என்னிடம் முழு நம்பிக்கை காட்டிய தென் இந்திய ஆசிரியர் சங்கத்திற்கும் அதன் நிர்வாகக் கமிட்டிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு "பாலர் கல்வி" நீடூழி வாழ்ந்து ஆரம்ப ஆசிரியர்களுக்கு பணி செய்துவருமாறு இறைவன் அருள்வாராக என்று பிரார்த்தித்து, ஆரம்ப ஆசிரியர்கள் இப் "பாலர் கல்வி"க்கு பூரண ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

S. நடராஜன்

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri S. Natarajan & Published by Sri T. P. Srinivasavaradan for the S. I. T. U., at Rajah Annamalaipuram, Madras-28.